பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 11 வியாழக்கிழமை 26.12.2024 கதிர் 049

## இனி இது ரகசியம் அல்ல!

கடந்த ஓரிரு வாரங்களாக வடக்கு மாகாண ஆளுநர் பொ-து இடங்களில் ஆற்றிவரும் பேச்சு அரச அதிகாரிகள் மட்டத்தில் அவருக்கு எதிரான சலசலப்பை ☞ 2

### கோட்டாபய ஆட்சிக் காலத்திய

# இயற்கை விவசாயத் திட்ட மோசடி பற்றி விசாரணை

### பிரதி அமைச்சர் நாமல் அறிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் காலத்தில் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உரங்கள் மற்றும் இயற்கை விவசாயத்தை அறிமுகப் படுத்துவதிலும்நடைபெற்றமோசடிகள்குறித்து ஆளும்தரப்பு புதிய விசாரணையொன்றை முன்னெடுக்கவுள்ளதாக விவசாயப் பிரதி அமைச்சர்நாமல்கருணாரத்னதெரிவித்தார்.

அவர்இதுகுறித்துமேலும்தெரிவித்ததாவது:

இவ்வாறான நிலையில் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உரம் மற்றும் இயற்கை விவசாயத்தை ஊக்குவிப்பதாகக் கூறி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக கடந்த ஆட்சியில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைளை முன்னெடுத்துள்ளோம்.அந்தவிசாரணைகளை எவ்வாறு ஆரம்பிப்பது என்பது சம்பந்தமாக ஆராய்ந்து வருகின்றோம்.

தேசிய கணக்காய்வாளர் நாயகம் தனது அறிக்கையில், சீனவிலிருந்து இறக்குமதி செயப்பட்ட உரத்துக்கான பரிவர்த்தனையில் விவசாய அமைச்சும், விவசாய இராஜாங்க அமைச்சும், கொழும்பு வணிக உரங்கள் ☞ 2

## ஆழிப்பேரலையின் 20ஆவது ஆண்டு நினைவு இன்று

ஆழிப்பேரலை (சுனாமி) ஏற்பட்டு 20 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் இன்று தேசிய பாதுகாப்பு தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அதற்கமைய, ஆழிப்பேரலையினால் உயிரிழந்த மக்களை நினைவுகூரும் வகையில் நாடுமுழுவதும் இன்று ☞ 2

## இந்திய அரச வங்கிக்கு ரூ. 20 லட்சம் அபராதம்

### நிதியியல் புலனாய்வுப் பிரிவு விதிப்பு

இந்திய அரச வங்கியொன்றுக்கு இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் புலனாய்வுப்பிரிவு 20 லட்சம் ரூ-பாய் அபராதம் விதித்துள்ளது.

இலங்கையின் 2006 ஆம் ஆண்டு 6 ஆம் இலக்க நிதியியல் பரிமாற்ற அறிக்கையிடல்சட்டத்தின்சரத்துக்களுக்கு அமைவாக செயற்படாமையினாலேயே மத்தியவங்கியினால்மேற்குறிப்பிட்டவாறு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவ்வங்கி, இலங்கையில் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் தமது வங்கியின் கிளைகள்இயங்கிவருவதாகவும்,எதிர்வரும் காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதைத் தவிர்ப்பதற்கு அவசியமானநடவடிக்கைகள்எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளது.

## சவேந்திரவின் பதவி நீடிப்பு பற்றி இன்னும் முடிவில்லை

பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வாவின் பதவிக்காலத்தை நீடிப்பது தொடர்பில் இன்னமும்தீர்மானிக்கவில்லைஎன்று ஆளும்தரப்பு அறிவித்துள்ளது.

பாதுகாப்புபடைகளின்பிரதானியாக இருந்துவரும் ஜெனரல் சவேந்திர சில்வாவின் பதவிக்காலம் டிசெம்பர் 31 நிறைவுக்கு வருகின்றது. எனினும் தற்போது வரையில் அவரது பதவிக் காலம் நீடிக்கப்படுமா இல்லை அப்பதவிக்கு புதியவர் நியமிக்கப்படுவாரா என்பது தொடர்பில் எவ்விதமான அறிவிப்புக்களும் வெளியிடப்படவில்லை.

"பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வாவின் பதவிக்காலம்சம்பந்தமாகஇதுவரையில் எவ்விதமான தீர்மானங்களையும் எடுக்கவில்லை. அதுதொடர்பில் விரைவில் தீர்மானம் எடுப்போம்'' என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இது தொடர்பில் தெரிவித்தார்.

இலங்கையின் 23ஆவது இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா பதவி வகித்திருந்த நிலையில்2022ஆம்ஆண்டுஜூன்முதலாம்திகதிபாதுகாப்புப்படைகளின்பிரதானியாகமுன்னாள்ஜனாதிபதிகோட்டாபய ராஜபக்சவினால் நியமிக்கப்பட்டார்.

அதன் பின்னர் கடந்த ஜூன் மாதம் முதலாம் திகதி அவருடைய பதவிக்காலம் நிறைவுக்கு வந்திருந்தபோதும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அவருக்கு 6 மாதங்கள் பதவி நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது.

### ஜனாதிபதி நிதியத்திலிருந்து

## அரசியல்வாதிகள் பெரும் நிதி உதவி பெற்றதை நியாப்படுத்தும் வக்கும்புர

ஜனாதிபதி நிதியத்திலிருந்து அரசியல்வாதிகள் பல கோடி ரூபாய் வரை நிதி உதவி பெற்றிருப்பதை நியாயப்படுத்திப் பேசியிருக்கின்றார் முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்பர.

மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவர் ரோஹண விஜேவீரவின் இறப்பிற்குப் பின்னர் அவரது குடும்பத்தார் கடற்படை முகாமிலேயே பராமரிக்கப்பட்டனர். அதற்கு மக்களின் வரிப்பணமே செலவிடப்பட்டது. அது தவறில்லை என்றால் ஜனாதிபதி நிதியத்திலிருந்து சட்ட ரீதியாக உதவிப் பணம் பெற்றது எவ்வாறு தவறாகுமென அவர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவிடம் கேள்விபுகின்றார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய ☞ 2

### பண்டிகைக் காலங்களில்

## விபத்துக்களைத் தடுக்க நடவடிக்கைகள் தேவை

பண்டிகைக் காலங்களில் வீதி விபத்துக்களை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இலங்கை தேசிய வைத்தியசாலையின் விபத்து பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் இந்திக்க ஜாகொட தெரிவித்துள்ளார்.

அதிக வேகம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றாமை போன்ற காரணங்களால்வீதிவிபத்துகள் அதிகரித்துவருவதாகவும்அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வீதி விபத்துக்கள் தடுக்கப்படக்கூடிய ஒன்றாகும் எனவும், மக்கள் இது தொடர்பில் பாதுகாப்பானநடைமுறைகளை பின்பற்றுமாறும் அவர் ☞ 2

## மூளை ஆரோக்கியம் தொடர்பான விழிப்புணர்வுக்கு 100 பேர் குழு

இலங்கையில் முதன் முறையாக மூளை ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கு பொது மக்களை தொளிவூட்டும் நோக்கில் விசேட பயிற்சிபெற்ற தன்னார்வ சிறப்பு தூதுவர்கள் 100 பேரை உள்ளடக்கிய தன்னார்வ தொண்டர் குழு நாடளாவிய ரீதியில் விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அவர் இரத்மலானை ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மூளை ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கான முக்கிய 10 விடயங்கள் தொடர்பில் ☞ 2

## முறையற்று நிதி பெற்றவர்களின் முழுப் பட்டியலையும் வெளியிடுக

### உதய கம்மன்பில வலியுறுத்து

ஜனாதிபதி நிதியத்தில் இருந்து முறையற்ற வகையில் நிதி பெற்ற அரசியல்வாதிகளின் பெயர்ப் பட்டியலை ஆளும்தரப்பு முழுமையாக வெளியிடவேண்டும். உரிய விசாரணைகளை ☞ 2

## மோ. சைக்கிளை டிப்பர் மோதிய விபத்தில் 2 வயது குழந்தை சாவு

### ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மேலும் மூவர் படுகாயம்

கிளிநொச்சி நகரில் இடம்பெற்ற விபத்தில் 2 வயது குழந்தை உயிரிழந்ததுடன் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்று இரவு 7.00 மணியளவில் மோட்டார் சைக்கிளுடன் ரிப்பர் வாகனம் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ஏ - 9 வீதியால் பயணித்த ரிப்பர் வாகனம் குறித்த மோட்டார் சைக்கிளை மோதி விபத்தினை ஏற்படுத்தியதுடன், விபத்து இடம்பெற்ற பகுதியிலிருந்து சுமார் 100 மீற்றல் பாதையை விட்டு விலகிப் பயணித்துள்ளது.

விபத்தில் சிக்கிய மோட்டார் சைக்கிளையும் டிப்பர் வாகனம் குறிப்பிட்ட அளவு தூரம் இழுத்து சென்றுள்ளதுடன், தொழிற்பயிற்சி நிறுவனத்தின் விளம்பர பலகை மற்றும் தொலைத்தொடர்பு கம்பம் உள்ளிட்டவற்றையும் சேதப்படுத்தியுள்ளது.

ரிப்பர் வாகனச் சாரதி மதுபோதையில் இருந்தார் என்று சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தபோதும் அது உறுதிப்படுத்தப்படவில்லை. சாரதியை பொலிசார் கைது செய்துள்ளனர்.

சம்பவத்தில், மோட்டார் சைக்கிளில் பயணித்த 2 வயதுக் குழந்தை உயிரிழந்தது. அதன் தாய், தந்தை மற்றும் 6 வயது சகோதரன் ஆகியோர் படுகாயமடைந்த நிலையில், கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிசார் தெரிவிக்கின்றனர்.

## ஆட்கடத்தலைத் தடுப்பதற்காக 69 அதிகாரிகளுக்குப் பயிற்சி

சர்வதேசஅபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் அனுசரணையுடன் இலங்கையைச்சேர்ந்த69அதிகாரிகளுக்கு குடியகல்வு சட்டம் மற்றும் கொள்கைதொடர்பில்சான்றிதழ் கற்கைநெறிவழங்கப்பட்டுள்ளது. அதன்மூலம் அவ்வதிகாரிகள் ஆட்கடத்தலை முயற்சிகளை முறியடிப்பதற்கு அவசியமான அறிவையும், திறன்களையும் பெற்றிருக்கிறார்கள் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

சர்வதேசஅபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் 'ஆட்கடத்தலை முறியடிக்கும் நோக்கில் சிவில் சமூகத்தை வலுப்படுத்தல்' செயற்திட்டம் மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் இணைந்துமுன்னெடுக்கப்பட்ட இந்த 6 மாதகாலக் கற்கைநெறியின் ஊடாக அரசதுறைஅதிகாரிகள், ஊடகவியலாளர்கள், இளைஞர்கள், தன்னார்வலர்கள்மற்றும்சிவில் சமூகப்பிரதிநிதிகள் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஏற்படுத்தியுள்ளதைக் காணமுடிகின்றது. அரச அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் மக்களோடு இணக்கமாக இல்லை, அவர்களுக்குச்சேவைஆற்றும்நோக்கத்தோடு, மனநிலையோடு அவர்கள் செயற்படவில்லை என்றசாரப்பட அவர் இரண்டொரு இடங்களில் உரையாற்றியிருந்தார்.

ஓர் அரச அலுவலகத்தில் சேவை பெற வரும் பொதுமக்கள், அந்தச் சேவையில் திருப்தியின்றிமேலதிகாரியிடம்முறையிட்டால், அதன் பின்னர் அவர்கள் அந்த அரச பணியாளர்களால் பழிவாங்கப்படுகிறார்கள். வேண்டும் என்றே அலைக்கழிக்கப்பட்டுப் பழிவாங்கப்படுகின்றார்கள்என்றும்இத்தகைய அரசஅதிகாரிகளைவைத்துக்கொண்டுசேவை செய்வது பெரும் சிரமம் என்றும் ஆளுநர் தனது உரைகளில் தெரிவித்திருந்தார்.

இது பல அதிகாரிகள் மற்றும் அரச பணியாளர்களுக்குக் கோபத்தை வரவழைத்துள்ளதைக் காண முடிகின்றது. அதுவும் அரச உயர் அதிகாரியாகக் கடமையாற்றிய ஒருவரே தமது துன்ப துயரங்கள் குறித்து அறியாதவர் போன்று இப்படிக் கருத்துத் தெரிவிப்பது தமது பணியை மேலும் கடினமாக்குவதாக அவர்கள் குறைப்படுகின்றார்கள். ஆளுநரின் இத்தகைய கூற்றுக்கள் பொதுமக்களில் சிலரையாவது தான்தோன்றித்தனமாகவும் பொறுப்பற்ற வகையிலும் எடுத்தெறிந்தும் அரச அலுவலகங்களில் நடப்பதற்குத் தூண்டுவதாகவும் அவர்கள் கூறுகின்றனர். இது அரசஅலுவலர்களின்பணிகளைமேலும் சிக்கலுக்குள்ளாக்கும் என்றும் அவர்கள் அச்சப்படுகின்றனர்.

இதேவேளை, ஆளுநர் அரச அதிகாரியாக இருந்தபோது மட்டும் அவர் இப்போது சொல்கிறபடியா செயற்பட்டார் என்கிற வகையில் அவருக்கு எதிரான கருத்துக்களைப்பரப்பக்கூடியதிட்டமிடல்களும் இடம்பெறுகின்றன என்று தெரிகின்றது. ஒரு பத்திரிகையாளரின் பெயரில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஆ-ளுநர் யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய காலத்தில் தொடங்கப்பட்டு முடிக்கப்படாமல் போன திட்டங்கள்குறித்ததகவல்கள்கிளறப்படுகின்றன என்றுதகவல்கள். பல—நூறுஎண்ணிக்கையில் இருக்கும் அத்தகைய திட்டங்களின் எண்ணிக்கையைக் காட்டி இவர் மட்டும் யோகியதையா? என்று பதிலடிகொடுப்பதே நோக்கமாகத் தெரிகிறது.

இது எல்லா இடங்களிலும் உள்ளக மோதல்கள் வலுக்கும் காலம். இன்னும் என்னவெல்லாம் நடக்கும் என்று பொறுத்திருந்து பார்க்கலாம்.

..........................

தமிழ் அரசுக் கட்சியின் உள்மோதல் தனி நபர்களின்தேவைகள், விருப்புக்கள், ஆசைகள் காரணமாக நிகழ்வன. அதிகாரத்தைக் கைப்பற்றுதல் அதன் அடிநாதம். அதனால் அந்த மோதலைத் தாண்டி அந்தக் கட்சியின் கடந்தகாலம்குறித்துநாற்றமடிக்கும்வகையில் எதுவும் பெரிதாக வெளிவருவதில்லை. ஆனால் பின்னாளில் தம்மை ஜனநாயகக் கட்சிகளாகக் காட்டிக்கொள்ளும் முன்னாள் ஆயுதக் குழுக்களின் உள்முரண்பாடுகள் அப்படியில்லை. அவற்றைக் கிளறக் கிளற நாற்றம் தாங்க முடியாததாக இருக்கின்றது.

ரெலோவின் உள்மோதல் அப்படிப்பட்ட பல நாற்றங்களையும் மக்கள் முன்பாகப் போட்டுடைக்கும் என்றும் தெரிகின்றது. ரெலோவின் உட்கட்சி மோதல் காரணமாக நீதிமன்றத்தைநாடுவதற்குசிலநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படுகின்றது. அப்படி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டால் ரெலோவின் உட்படுகொலைகள், சகோதரப் படுகொலைகள், அவர்கள் அரச ஒட்டுக்குழுக்களாக இருந்ததற்கான ஆதாரங்கள், ஒட்டுக்குழுவாக அரச புலனாய்வுத்துறையிடமிருந்து நிதி பெற்றதற்கான ஆதாரங்கள், அதற்கு நன்றிக்கடனாக அவர்கள் செய்தவைகள், கொலைகள், கொள்ளைகள் என்று எல்லாவற்றையும் பகிரங்க நீதிமன்றில் இழுத்துவிட்டு அம்பலப்படுத்துவதற்கான ஆயத்தங்கள் கனகச்சிதமாக இடம்பெற்று வருகின்றன.

நீதிமன்றத்திற்கு அவை வரும்போது அது தொடர்பான பல ஆவணங்களும் குரல்பதிவுகளும் சாட்சிகளின் வாக்குமூலங்களும் ஊடகங்களிலும் வெளியாகும் என்றும் தெரிகின்றது. இதன் மூலம் கடந்த காலங்களில் நிகழந்த பல சம்பவங்கள் தொடர்பான உண்மைகள் பலவும் வெளிவரும் என்று எதிர்பார்க்கலாம்.

விடை கிடைக்காத பலவற்றுக்கும் இந்த வழக்குகளில் விடை கிடைக்கும் என்று தெரிகிறது.

அதுமட்டுமல்ல, பின்கதவு டீல்கள் பலவற்றின் விவரங்களும் இந்தப் உட்பிளவுகளால் தொடர்ந்து வெளியாகிக் கொண்டே இருக்கின்றன. கிளிநொச்சியில் 'பார் லைசென்ஸ்' எடுத்துக் கொடுப்பதற்காக கட்சிப் பிரமுகர் ஒருவர் கோடிக் கணக்கில் பணம் பெற்றுக்கொண்டு, அந்த 'லைசென்ஸ்' எடுக்க உதவிய பெரும்பான்மை இனத்தைச்சேர்ந்த தரகருக்குத் தருவதாக வாக்குறுதியளித்த பணத்தை தராமல் ஏமாற்றியது தொடர்பான ஒலிப்பதிவைக் கேட்ட பின்னர் அது பற்றிய விவரங்களை ஏற்கனவே வாசகர்களுடன் பகிர்ந்து கொண்டிருக்கின்றேன்.

இப்போது இந்தியப் பல்கலைக்கழகம் ஒன்றின் கிளையை கண்டியில் நிறுவுவதற்காகவும் அதே கட்சிப் பிரமுகர் பல கோடி ரூபாய்களைப் பெற்றுக்கொண்டு ஏமாற்றிவிட்டார் என்று உள்ளூர் வர்த்தகர் ஒருவர் வழங்கிய வாக்குமூலம் குறித்த ஒலிப்பதிவையும் கேட்க முடிந்தது. இந்த மோசடிகளில் எல்லாம் சொல்லப்படுகின்ற தொகைகளைக் கேட்கும் போது, ஜனாதிபதி நிதியத்தில் ஆகக் கூடுதல் நிதி உதவி பெற்ற முன்னாள் அமைச்சர் கெஹலியவெல்லாம் எந்த மூலைக்கு என்று தோன்றுகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இயற்கை ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிமிடெட் மற்றும் சிலோன் உர நிறுவனம் ஆகியன தமது கடமையைச் சரியாக ஆற்றவில்லை என்பதை மிகத் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்.

இதேரேம் 2021 ஆம் ஆண்டில் தோல்வியடைந்த இயற்கை விவசாயத் திட்டத்திற்கு அப்போதைய ஆளும்தரப்பு மிகப்பெரிய தொகையைச் செலவிட்டுள்ளது. அந்த ஆளும்தரப்பு குறித்த திட்டத்துக்காக 60 பில்லியன் ரூபாயைச் செலவிட்டதாகக் கூறப்படுகிறது. நாங்கள் அதையும் விசாரிக்கவுள்ளோம்.

கடந்த காலத்தில் நடந்த மோசடிகள் பற்றிய விவரங்களைக் கொண்ட ஆயிரக்கணக்கான கோப்புகளை நாங்கள் சம்பந்தப்பட்ட தரப்புக்களிடம் ஒப்படைத்துள்ளோம். கோப்புக்கள் ஒவ்வொன்றும் விசாரிக்கப்படும்

அந்த நேரத்தில் இலங்கை அசேதன விவசாயத்தை தடை செய்து இயற்கை விவசாய முறைமையை திடீரென்று தீர்மானம் எடுத்து நாடியது. இருப்பினும், விவசாயிகளால் அம்முறையை உடனடியாக ஏற்றுக்கொள்ள முடியாமையின் காரணமாக விளைச்சல் குறைவடைந்ததோடு இறுதியில் விவசாயிகளிடையே அமைதியின்மையை ஏற்பட்டமை அனைவரும் அறிந்த விடயம் என்றார்.

முன்னாள்ஜானாதிபதிகோட்டாபயராஜபக்ச ஆளும்தரப்பு இயற்கை விவசாயத்தினை நாடுவதாக ஒரேநாளில் எடுத்த தீர்மானத்திற்கு அமைவாக 2021 ஆம் ஆண்டில் சீனாவின் கிங்டாவோ சீவின் பயோடெக் குரூப் லிமிடெட்டிலிருந்து இலங்கை உயிர்ச்சேதன உரத்தை கொள்வனவு செய்தது.

இருப்பினும், கையிருப்பின் மாதிரிகள் தீங்கு விளைவிக்கும் பாக்டீரியாக்களால் மாசுபட்டிருப்பது கண்டறியப்பட்டதை அடுத்து ஆளும்தரப்பு குறித்த உரத்தினை நாட்டுக்குள் கொண்டுவருதற்கு மறுத்துவிட்டது. குறித்த நிறுவனம் அக்குற்றச்சாட்டை மறுத்ததோடு இறக்குமதி செய்யப்பட்ட உரத்துக்கான கொடுப்பனவை வழங்குமாறும் கடுமையாக வலியுறுத்தியது - என்றார்.

## விபத்துக்களைத்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டுக்கொண்டுள்ளார்.

குறிப்பாக, மோட்டார் சைக்கிள் ஓட்டுபவர்களுக்கு தலைக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட வேண்டும் என்று விசேட வைத்தியர் இந்திக்க ஜாகொட தெரிவித்தார்.

வாகனங்களில் பயணிக்கும்போது முன் இருக்கைகளில் அமர்ந்திருப்பவர்கள் மாத்திரமே சீட் பெல்ட் அணிகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார். எனினும், விபத்து ஏற்படும் போது, சீட் பெல்ட் அணியாத பின் இருக்கையில் பயணிப்பவர்களுக்கு விபத்தால் ஏற்படும் பாதிப்புக்கள் தீவிரம் மிக அதிகம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஆழிப்பேரலையின்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்பகல் 9.25 முதல் 9.27 வரை 2 நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்துமாறு அனர்த்த முகாமைத்துவநிலையம்வலியுறுத்தியுள்ளது.

இன்றைய தினம் அனுஷ்டிக்கப்படவுள்ள தேசிய பாதுகாப்பு தினத்திற்கு இணையான பிரதான நிகழ்வு பாதுகாப்பு அமைச்சின் இடர் முகாமைத்துவ பிரிவு வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதுதவிர, மாவட்ட மட்ட நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி பேரழிவில் சிக்குண்டு 35 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்ததுடன், ஐயாயிரத்துக்கும் அதிகமானோர் காணாமல் போயிருந்தனர்.

## அரசியல்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இது தொடர்பில் தெரிவித்ததாவது:

தமது வாழ்க்கைச் செலவைக் குறைக்கவேண்டும் என்பதையே ஆட்சி மாற்றத்தின் ஊடாக மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால்அவ்வாறுஎந்தவொருமாற்றத்தையும் அவதானிக்கக் கூடியதாக இல்லை.

கடந்தஆளும்தரப்பால்முன்னெடுக்கப்பட்ட திட்டங்களின் காரணமாகவே இன்று நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டிருக்கின்றது. ஆனால் தற்போது அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதேதவிர, குறைவடையவில்லை.

இன்று உப்பைக்கூட இறக்குமதி செய்து அதிக விலைக்கு விற்பனை செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அன்று மஞ்சள் இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டபோது கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது. ஆனால் இன்று மஞ்சள் உற்பத்தியில் நாம் தன்னிறைவடைந்துள்ளோம். அவ்வாறிருக்க நாட்டைச் சூழ கடலை வைத்துக் கொண்டு உப்பை இறக்குமதி செய்யும் நிலைமைக்கு குறுகிய காலத்துக்குள் இந்த ஆளும்தரப்பு வீழ்ச்சியடைந்துள்ளது. எனவே குறைந்தபட்சம் எம்மால் ஆரம்பிக்கப்பட்ட வேலைத் திட்டங்களையாவது தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லுமாறு கேட்டுக் கொள்கின்றோம். அவ்வாறில்லை என்றால் உப்பைப் போன்று ஏனைய அத்தியாவசிய உணவு பொருட்களையும் இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடும்.

நீங்கள் கேட்டதைப் போன்று மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கியிருக்கின்றார்கள். எனவே வழங்கிய வாக்குறுதிகளைநிறைவேற்றுங்கள். ஜனாதிபதி நிதியத்திடமிருந்து தவறான வழியில் உதவித் தொகையைப் பெற்றிருந்தால் மாத்திரமே அதனைக் குற்றமெனக் கூற முடியும். ஆனால் இதுவரை சட்ட ரீதியாகவே அனைவரும் உதவித் தொகையைப் பெற்றிருக்கின்றனர்.

முன்னாள் பிரதமர் தி.மு. ஜயரத்னவும் ஜனாதிபதி நிதியத்திலிருந்து உதவித் தொகை பெற்றிருக்கின்றார். ஆனால் அவர் தற்போது உயிருடனில்லை. இறந்தவர்களை இவ்வாறு நிந்திக்க வேண்டாம் என்று ஆளும்தரப்பிடம் கோருகின்றோம்.

ரோஹண விஜேவீர இறந்துவிட்டார். ஆனால் அவரது மனைவி மற்றும் பிள்ளைகள் உள்ளிட்ட குடும்பத்தார் கடற்படை முகாமில் நீண்ட காலம் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

அதற்கு ஜே.வி.பி. பணம் வழங்கியதா? மக்களின் வரிப்பணத்திலேயே அவர்களும் பராமரிக்கப்பட்டனர். இவர்களுக்காக ஆளும்தரப்பு எவ்வளவு செலவிட்டது என்ற தகவலை வெளியிடுமாறு அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவுக்கு சவால் விடுக்கின்றேன். மாறாக அவர்கள் ஆளும்தரப்பின் செலவில் பராமரிக்கப்படவில்லை என்றால் நான் மன்னிப்பு கோருகின்றேன் என்றார்.

## முறையற்று....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டு நிதியை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் எதுல்கோட்டையில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் இது தொடர்பில் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி நிதியத்தில் இருந்து நிதி பெற்ற அரசியல்வாதிகளின் பெயர் பட்டியலை ஆளும்தரப்பு வெளியிட்டுள்ளது. இதனால் ஒட்டுமொத்த அரசியல்வாதிகளும் ஜனாதிபதி நிதியத்தில் இருந்து நிதி பெற்றுள்ளனர் என்று மக்கள் மத்தியில் தவறானதொரு நிலைப்பாடு தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கு உதவியளிப்பதற்கும், அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் 1978 ஆம் ஆண்டு ஜனாதிபதி நிதியம் ஸ்தாபிக்கப்பட்டது. 2005-2024 வரையான காலப்பகுதியில் அரசியல் அதிகாரத்துடன் அரசியல்வாதிகள் ஜனாதிபதி நிதியத்தில் இருந்து கோடிக்கணத்தில் நிதி பெற்றுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

முறையற்றவகையில்நிதிபெற்றவர்களின் முழு விவரத்தையும் ஆளும்தரப்பு வெளியிடவேண்டும் அத்துடன் உரிய விசாரணைகளை மேற்கொண்டு அந்நிதியை மீள அறவிட வேண்டும் என்பதை அரசாங்கத்திடம் வலியுறுத்துகிறேன்.

தேசிய மக்கள் சக்தி 75 ஆண்டுகால அரசியல் கலாச்சாரத்தையும் விமர்சித்து தான் ஆட்சிக்கு வந்தது. ஆகவே கடந்த காலங்களில் முன்வைத்த குற்றச்சாட்டுக்களை சட்டத்தின் முன் ஆதாரபூர்வமாக நிரூபிக்கும் பொறுப்பு ஆளும்தரப்புக்கு உண்டு என்றார்.

## ஆட்கடத்தலைத்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனப் பலரும் குடியகல்வு சட்டம் பற்றியும், ஆட்கடத்தலை முறியடிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் போதிய தெளிவைப் பெற்றுள்ளனர்.

இதுகுறித்துக் கருத்து வெளியிட்டிருக்கும் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பணிப்பாளர் கேப்ரியல் க்ரோ, 'ஆட்கடத்தல் என்பது உலகளாவிய ரீதியில் மிகமுக்கிய பிரச்சினையாகக் காணப்படுகின்ற போதிலும், அதற்கு எதிரான போராட்டம் என்பது சமூகங்களின் மத்தியிலிருந்தே தொடங்கும்.

அதற்கமைய பாதுகாப்பான குடியகல்வை ஊக்குவிக்கும் அதேவேளை, ஆட்கடத்தலை முறியடிப்பதற்கு அவசியமான தெளிவூட்டலை வழங்குவதை முன்னிறுத்தி இலங்கை அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றியதையிட்டு பெருமிதமடைகின்றோம்' எனத் தெரிவித்துள்ளார்.

## மூளை ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் நாட்களில் பொதுமக்களை தெளிவூட்டுவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அடிமட்டதளத்திலிருந்துஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த சிறப்பு வேலைத்திட்டத்தை எதிர்வரும் காலங்களில் பரந்துபட்ட அளவில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அனைத்து ஊட்டச்சத்துக்கள் நிறைந்த ஆரோக்கியமான உணவு, உடல் சுறுசுறுப்பு மிக்க ஆரோக்கியமான சமூகத்தை ஏற்படுத்திக் கொள்ளுதல், உடல் எடை, புகைப்பிடித்தல், கொலஸ்ரோல், நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் ஆகியவற்றை சீராக பேணுவதுடன், மன அழுத்தம் மற்றும் நித்திரை தொடர்பிலும் பொதுமக்களுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளது.

கொத்தலாவலபாதுகாப்புபல்கலைக்கழகம் அதனுடன் இணைந்த வைத்தியசாலையும் இணைந்து இத்திட்டத்தை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளன. மூளை சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக முன்னெடுக்கத் தீர்மானித்துள்ள மேற்படி விழிப்புணர்வு வேலைத்திட்டம் சிறந்த முயற்சியெனக் கருதுகிறேன்.

இதற்காக முன்னின்று உழைக்கும் தன்னார்வ சிறப்பு தூதர்களுக்கும் இந்த தருணத்தில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். இதை இந்நாட்டின் சுகாதார சேவையின் மாற்றத்தின் ஆரம்ப புள்ளியாக காண்கிறேன்.

அரசாங்கம் வருடாந்தம் நோய் தடுப்பு மற்றும் சிகிச்சைகளுக்காக பெருமளவான தொகையை செலவிடுகிறது. இவ்வாறான தன்னார்வு செயற்பாடுகளின் காரணமாக இந்நாட்டு மக்கள் நோயாளிகளாவதை தடுப்பதற்கான ஆலோசனைகளும் தெளிவூட்டல்களும் வழங்கப்படுகின்றன.

ஆகையால்இதுபோன்றசெயற்பாடுகளுக்கு அரசாங்கம் தனது பூரண ஒத்துழைப்பை

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர்
Kalaikkathir

# காத்தான்குடி பிரதேச வீதி அபிவிருத்தி குறித்துப் பிரபு எம்.பி. நேரில் ஆராய்வு





(ஹஸ்பர்)

காத்தான்குடி பிரதேச அபிவிருத்திக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்புமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு, காத்தான்குடி தேசிய மக்கள் சக்தியின் அமைப்பாளரான பிர்தௌஸ் நளீமியின் அழைப்பின்பேரில் கடந்த செவ்வாய்க்கிழமை காத்தான்குடிக்கு விஜயம் செய்தார்.

இதன்போது காத்தான்குடி நகர சபையின் செயலாளர் றிப்கா சபீன் அவர்களைச் சந்தித்து பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய வீதி அபிவிருத்திப் பணிகள் குறித்து கலந்துரையாடினார்.

உலக வங்கியின் நிதி உதவியோடு கடந்த அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட வீதி அபிவிருத்திகள் தொடர்பாகவும், அது தொடர்பில் அப்பிரதேச மக்கள் முன்வைத்துள்ள 'வீதியானது இருபக்க வடிகான்களைக் கொண்டதாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்' என்ற கோரிக்கை தொடர்பிலும் இக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

இக் கலந்துரையாடலைத் தொடர்ந்துபுதியகாத்தான்குடி பெரியஜும்மாபள்ளிவாயல் (அல் அக்ஸா பள்ளிவாயல்) வீதி மற்றும் புதிய காத்தான்குடி பெண்கள் சந்தை வீதி ஆகிய வீதிகளை நாடாளுமன்ற உறுப்பினர்பார்வையிட்டதுடன் பிரதேசமக்களுடனும்கலந்துரையாடினார்.

அண்மையில் இப்பகுதி மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு அவர்களை நேரில் சந்தித்து இந்த வீதி அபிவிருத்தி பணி தொடர்பில் மகஜர் ஒன்றையும் கையளித்திருந்தனர்.

இங்கு கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர், இந்த விடயங்களை வீதி அபிவிருத்தி அதிகார சபை, உலக வங்கி பிரதிநிதிகள் மற்றும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் கவனத்திற்கும் கொண்டு வரவுள்ளதாகவும் மக்களின் கோரிக்கைகளை கருத்திற் கொண்டு, தரமான முறையில் இந்த வீதியை அபிவிருத்தி செய்வதை தாம் உறுதி செய்வதாகவும் குறிப்பிட்டார்.

இந்த விஜயத்தில் தேசிய மக்கள் சக்தியின் காத்தான்குடி செயற்குழு உறுப்பினர்களும் பங்கேற்றிருந்தனர்.

# எலிக் காய்ச்சல் – டெங்கு நோய் தொடர்பில் மீளாய்வுக் கூட்டம்








(நூருல் ஹுதா உமர்)

எலிக் காய்ச்சல் மற்றும் டெங்கு நோய் தொடர்பான மீளாய்வுக் கூட்டமொன்றுகல்முனைபிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இடம்பெற்றது.

பிராந்திய தொற்றுநோய் தடுப்பு பிரிவால் ஒருங்கிணைப்பு செய்யப்பட்டு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பிராந்திய தொற்றுநோய் தடுப்பு பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஏ.சீ.எம்.பசால், சுகாதார வைத்திய அதிகாரிகள், மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர்கள், பொதுச்சுகாதாரபரிசோதகர்கள் கலந்து கொண்டனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பூச்சியல் ஆய்வுக் குழுவின் பொறுப்பாளர் சுகாதார பூச்சியியல் உத்தியோகத்தர் கே.ஏ.ஹமீட் தயாரித்த வருடாந்த பூச்சியியல் ஆய்வறிக்கை இந்த மீளாய்வுகூட்டத்தின்போதுவெளியிடப்பட்டது. இதன் பிரதிகளை பிராந்திய பணிப்பாளர், தொற்று நோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி ஆகியோருக்கு பூச்சியல் உத்தியோகத்தர் ஹமீட் வழங்கி வைத்தார்.

# திருமலை நகரில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகம்

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டம், திருகோணமலை நகர சபை பகுதிக்குட்பட்ட பிரதான வீதிகளில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரிப்பால் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக பாதசாரிகள் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை நகர் பிரதான வீதியில் குறித்த மாடுகளின் நடமாட்டம் அதிகரிப்பால் நடுவீதியில் பல மாடுகள் நிற்பதால் போக்குவரத்து தடை செய்யப்படுவதுடன் விபத்து சம்பவங்களும் ஏற்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த நகர் பகுதியில் வீடுகளில் சேரும் குப்பை கழிவுகளைவீட்டின்முன்நுழை வாயிலின் வெளிப்பகுதியில் வைப்பதால் அதனை இக்கட்டாக்காளி மாடுகள் அங்கும் இங்கும் இழுத்து வீதியை நாசமாக்குவதாகவும் தெரிவிக்கின்றனர்.

ஏனவேகுறித்தகட்டாக்காளி மாடுகளைகட்டுப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.





# சுனாமி நினைவுதினமும் குருதிக்கொடை நிகழ்வும்

(நூருல் ஹுதா உமர்)

சமூக நல விடயங்களில், மனிதாபிமான ரீதியாகசிறப்பாகஇயங்கும்மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த சுனாமி அனர்த்த தினத்தின் இருபதாவது நினைவு முன்னிட்டு ஏற்பாடு செய்துள்ள சுனாமி நினைவு தின நிகழ்வும் குருதிக்கொடையும்இன்று (வியாழக்கிழமை) மாளிகைக்காடு மத்தி தோணா வீதியில் அமைந்துள்ளஜனாஸாநலன்புரிஅமைப்பின் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

சுனாமியில் மரணித்த ஸஹுதாக்களை நினைவு கூர்ந்து நடைபெறும் இந்த இரத்ததான முகாமை அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். ஜெகராஜன், காரைதீவு பிரதேச செயலாளர் ஜீ. அருணன் உட்பட பிரமுகர்கள் பலரும் தொடங்கி வைக்கவுள்ளனர்.

இந்த இரத்ததான முகாமில் கலந்து கொண்டு இரத்த தானம் செய்ய ஆர்வம் உள்ளவர்கள் இன்று காலை 08.30 மணி முதல் குருதிக்கொடை வழங்க முடியும் எனவும் பெண்களுக்கு பிரத்தியேக இடம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவிக்கின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# ஆழி செய்த ஊழியின் நினைவுகள்

ஆழிப்பேரலை, கடல்கோள், சுனாமி என்றெல்லாம் அழைக்கப்படும் இயற்கைப் பேரிடர் இலங்கையைத் தாக்கி பேரிடர் என்றால் என்ன என்பதை உணர்த்திச் சென்று இன்றோடு 20 ஆண்டுகள் ஆகின்றன. ஆற்றமுடியாத மனவடுவை ஏற்படுத்திய நிகழ்வு அதுவரையில் இல்லாத இயற்கை பற்றிய புரிதலை இலங்கையர்களுக்கு ஏற்படுத்தியது. அதுமட்டுமல்ல அச்சத்தையும் ஏற்படுத்தியது.

ஒரு சில மணி நேரங்களில் பல்லாயிரக்கணக்கான உயிர்களை இழந்தோம். மேலும் பலபல ஆயிரம் பேர் காயமடைந்தனர். போர், குண்டுவெடிப்புக்கள் என்று உயிரிழப்புகளுக்குப் பழகியிருந்த ஒரு தேசத்திற்கே இத்தகைய பேரிழப்பு பெரும் இடியாக இருந்தது. அன்றைய தினங்களில் ஒவ்வொரு நாளும் உயிரிழப்புக்களின் எண்ணிக்கைக் கணக்கெடுப்புத்தான் முக்கியமானதாக இருந்தது.

2004 மார்கழி 26 அன்று இந்தோனேசியாவின் சுமத்திரா தீவுகளுக்கு அருகே கடலில் ஏற்பட்ட பூகம்பம் இந்தப் பேரழிவுகளுக்குக் காரணமாக இருந்தது. ரிச்டர் அளவு கோலில் 9 புள்ளிகளுக்கு மேல் பதிவான இந்த நிலநடுக்கத்தால் கொந்தளித்த கடல் அலைகள் இலங்கை, இந்தோனேசியா, இந்தியா, தாய்லாந்து, மலேசியா என்று பல நாடுகளையும் தாக்கியது. திடீரென்று பல பத்தடிகள் உயர்ந்த கடல் அலைகள் ஊருக்குள் ஊடுருவி உயிர்களைத் தன்னோடு இழுத்துச் சென்றது.

இந்தப் பேரிடரால் 14 நாடுகளில் சுமார் 2 லட்சத்து 28 ஆயிரம் பேர் உயிரிழந்தார்கள். இலங்கை, இந்தியா, தாய்லாந்து, இந்தோனேசியா ஆகிய நாடுகள்தான் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன. 21ஆம் –நூற்றாண்டிலேயே மிக மோசமான, பயங்கரமான இயற்கைப் பேரிடர் என்று இது பெயரெடுத்தது. இலங்கையில் மட்டும் 35 ஆயிரத்து 322 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது. 21 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயப்பட்டனர். ஆயிரத்து 500 குழந்தைகள் அனாதைகளாக்கப்பட்டனர். 5 லட்சம் பேர் தமது சொந்த இடங்களைவிட்டு இடம்பெயர்ந்தனர். ஒரு லட்சம் வீடுகள் மற்றும் இருப்பிடங்கள் அழிக்கப்பட்டன. ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேர் தமது வாழ்வாதாரத்தை இழந்தனர். உயிர் பிழைத்தவர்களிலும் பல லட்சம்பேர் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டனர்.

கடல்நீர் உட்புகுந்ததால் விவசாய நிலங்கள் பாழாகின. பயிர் வளர்ப்புக்குத் தகுதியற்றவையாகின. இருந்தாலும் இந்தப் பேரிடரால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் கடற்றொழிலாளர்கள்தான். கடலருகிலேயே கடலை நம்பி வாழ்ந்து வந்த அவர்கள் கடலின் இந்தக் கோர முகத்தை ஏற்றுக்கொள்ள முடியாதவர்களானார்கள். இந்தப் பாதிப்பிலிருந்து மீண்டு வருவதற்கு அவர்களுக்கு அதிக காலம் பிடித்தது. மீண்டும் கடலுக்குச் செல்வதற்கு அவர்கள் அஞ்சினார்கள். பலர் பல வருடங்களாக மீண்டும் கடலுக்கே செல்லாத நிலமைகள் எல்லாம் ஏற்பட்டன.

இயற்றைப் பேரிடர்கள் குறித்த ஒரு பட்டறிவை இந்த ஆழிப் பேரலை இலங்கைக்குத் தந்தது. மீண்டும் ஒரு ஆழிப் பேரலை வந்தால் அதை எதிர்கொள்வதற்கான தயார்ப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. இன்றும்கூட அந்தப் பேரிடரின் தாக்கத்தை நினைவுகூரும் வகையில் ஆளும்தரப்பு நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்துள்ளது. இன்றைய தினத்தைத் தேசிய பாதுகாப்பு தினமாகக் கடைப்பிடிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஆழிப்பேரலையினால் உயிரிழந்த மக்களை நினைவுகூரும் வகையில் நாடுமுழுவதும் இன்று முற்பகல் 9.25 முதல் 9.27 வரை 2 நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்துமாறு இடர் முகாமைத்துவ நிலையம் வலியுறுத்தியுள்ளது.

இன்றைய தினம் அனுஷ்டிக்கப்படவுள்ள தேசிய பாதுகாப்பு தினத்திற்கு இணையான நிகழ்வு பாதுகாப்பு அமைச்சின் இடர் முகாமைத்துவ பிரிவு வளாகத்தில் இடம்பெறவுள்ளது. இதுதவிர, மாவட்ட மட்ட நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இவையெல்லாம் இருந்தாலும் இயற்கை இடர்களை எதிர்கொள்வதற்கான தயார்ப்படுத்தலை ஆழிப்பேரலைப்பட்டறிவுமூலம் நாம்திறம்படக்கையாண்டுவருகின்றோமா என்பது கேள்விக்குறிதான். ஆழிப் பேரலை பேரிடரின் பின்னர் அதுபோன்ற மற்றொரு பேரிடர் நிகழக்கூடாது என்பதற்கான பொறிமுறை ஒன்று நிறுவப்பட்டது. ஆழிப் பேரலை எச்சரிக்கைக் கருவிகள் பெருத்தப்பட்டன. கடலில் நில நடுக்கம் ஏற்பட்டால் மக்களை எச்சரிக்கக்கூடிய பொறி–முறை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் இன்று அவையெல்லாம் மெல்ல மெல்லக் கைவிடப்பட்டு கலாவதியாகிவிட்டன. இன்று மற்றொரு ஆழிப் பேரலை திடீரென ஏற்பட்டால் அதை எதிர்கொண்டு எம்மைத் தற்காத்துக்கொள்ளும் திறனோடு இருக்கின்றோமா என்று கேட்டால், முழுமையாக ஆம் என்று சொல்லிவிடமுடியாத நிலைதான் இருக்கின்றது. கடந்த காலங்களைவிட உயிரிழப்புக்களைத் தவிர்க்க முடிந்தாலும்கூட அவற்றை அடியோடு நிறுத்திவிடும் வல்லமையை வளர்த்துக்கொண்டோமா என்றால் இல்லை.

விழிப்புணர்வு நடவடிக்கைகளோடு மட்டும் நிற்காமல் ஆளும் தரப்புக்கள், இயற்கைப் பேரிடரிலிருந்து காப்பதற்கான நிரந்தரப் பொறிமுறைகளை நிறுவுவதன் மீதும் அவற்றைத் தொடர்ந்து பேணுவதன் மீதும்கூட அக்கறை செலுத்தவேண்டும்.

# அரிசியின் கட்டுப்பாட்டு விலை மாற்றம் பற்றி ஆராயவில்லை

## அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையில் மாற்றம் மேற்கொள்வது தொடர்பில் ஆளும்தரப்பு எந்தவொரு கலந்துரையாடலையும் முன்னெடுக்கவில்லை என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் அரிசிக்கான தட்டுப்பாட்டை நிவர்த்திக்கும் வகையில், அனுமதிப்பத்திரமின்றி அரிசி இறக்குமதி செய்வதற்கான கால அவகாசத்தை எதிர்வரும் 10 ஆம் திகதிவரை நீடிக்கும் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதேநேரம், அமைச்சரவை அங்கீகரித்த அளவுக்கு அரிசியை இறக்குமதி செய்வதற்கு ஆளும்தரப்புக்கு இயலாமல் போயுள்ளதாகவும், எதிர்வரும் காலங்களில் விநியோகஸ்தர்களிடமிருந்து எஞ்சிய அரிசி தொகை கிடைக்கப்பெறும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஆளும்தரப்புச் சார்பில் அரிசி இறக்குமதி செய்வதற்காக பொறுப்பளிக்கப்பட்ட அரச வர்த்தக கூட்டுத்தாபனம் மற்றும் சதொச நிறுவனத்தின் செயற்பாடுகளால் இவ்வாறு அரிசி இறக்குமதியில் தாமதம் ஏற்படவில்லை எனத் தெரித்தார்.

விநியோகஸ்தர்கள் எதிர்நோக்கிய சிக்கல் காரணமாகவே, ஆளும்தரப்பு இறக்குமதி செய்வதற்கு எதிர்பார்த்த அளவு அரிசியை, இலக்கு வைக்கப்பட்ட காலத்தினுள் இறக்குமதி செய்ய முடியாமல் போனதாக அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஆளும்தரப்பினால் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலைக்குச் சந்தையில் அரிசியை பெறமுடியாதுள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

அதேநேரம், இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கான வரியை நீக்குவதற்கு அல்லது கட்டுப்பாட்டு விலையை நீக்குவதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும் என வர்த்தகர்கள் கோருகின்றனர்.

அத்துடன், இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசி 220 ரூபாவுக்கே தங்களுக்கு வழங்கப்படுவதாகவும் அதனை ஆளும்தரப்பின் கட்டுப்பாட்டு விலைக்கு விற்பனை செய்வது சிரமம் எனவும் வர்த்தகர்கள் கூறுகின்றனர்.

இந்த நிலையில், கட்டுப்பாட்டு விலையில் மாற்றம் மேற்கொள்வது தொடர்பாக ஆளும்தரப்பு எந்தவொரு கலந்துரையாடலையும் முன்னெடுக்கவில்லை என அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

# ஜோசப் பரராஜசிங்கத்தின் நினைவு நாள் அனுஸ்டிப்பு

மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலத்தில் கிறிஸ்மஸ் ஆராதனையின்போது சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் 19ஆவது நினைவு தினம் மட்டக்களப்பில் அனுஸ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் நேற்று மாலை தமிழ் அரசுக் கட்சியின் வாலிப முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் சோபனன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. இதன்போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைக்கு நீதிவேண்டி அமைதியான முறையில் கவன ஈர்ப்பு ஊர்வலமொன்று நடத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மண்டபத்தில் ஜோசப் பரராஜசிங்கத்தின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில், தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சாணக்கியன், சிறிநேசன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மதத்தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# போக்குவரத்து விதிகளை மீறிய 9 ஆயிரம் பேர் மீது நடவடிக்கை

மதுபோதையில் வாகனம் செலுத்தியமை உள்ளிட்ட வீதி விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 8,747 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வீதி விபத்துக்களை தடுக்கும் வகையில் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என்றும் பொதுமக்களும், சாரதிகளும் வீதி விதிமுறை சட்டங்களை பின்பற்றுவது கட்டாயம் என்றும் பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர்.

பண்டிகை காலங்களில் ஏற்படும் வீதி விபத்துக்களை தடுக்கும் வகையில் பொலிஸாரினால் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் பணிப்புரைக்கு அமைய நாடளாவிய ரீதியில் டிசெம்பர் 22 முதல் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதற்கமைய நேற்றுமுன்தினம் (24) காலை 6 மணி முதல் நேற்று (25) காலை 6 மணி வரையிலான நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் மேற்கொள்ளப்பட்ட விசேட போக்குவரத்து கண்காணிப்பில் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 251 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக கவனயீனமாகவும் ஆபத்தான முறையிலும் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 81 பேருக்கு எதிராகவும் அதிக வேகத்தில் வாகனத்தை செலுத்திய குற்றச்சாட்டில் 128 பேருக்கும் எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் வீதி விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 1368 பேருக்கும் எதிராகவும் சாரதி அனுமதிப்பத்திர முறைகேடு தொடர்பில் 615 பேருக்கும் எதிராகவும் மற்றும் இதர போக்குவரத்து விதி மீறல்கள் தொடர்பில் 6,304 பேருக்கு எதிராகவும் இவ்வாறு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வீதி விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மொத்தமாக 8,747 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி புத்திக மனதுங்க தெரிவித்தார்.

கடந்த சில நாட்களாக வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ள நிலையில், அதனை தடுக்கும் வகையில் இந்த போக்குவரத்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 24 மணித்தியாலங்களில் நாட்டில் வாகன விபத்துக்களால் எந்தவித உயிரிழப்பு சம்பவங்களும் பதிவாகவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

வீதி விபத்துக்களை தடுக்கும் வகையில் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும். பொதுமக்களும். சாரதிகளும் வீதி விதிமுறை சட்டங்களை பின்பற்றுமாறு பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர்.

# அக்கரைப்பற்றில் இருபது வருடங்களாகியும் கையளிக்கப்படாமல் சுனாமி வீட்டுத் திட்டம்


(றமீஸ்)

சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து இருபது வருடங்களாகியும் இவ் அனர்த்தத்தின் மூலம் வெகுவாகப் பாதிக்கப்பட்ட அக்கரைப்பற்று பிரதேச மக்களுக்காக சவூதி அரேபிய அரசாங்கத்தின் அறக்கட்டளை நிதி மூலம் நவீன முறையில் நிர்மாணிக்கப்பட்ட 500 வீடுகள் கொண்ட நுரைச்சோலை சுனாமி வீடமைப்புத்திட்டம் இதுவரை தமக்கு வழங்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் சுனாமி அனர்த்தத்தின்போது முற்றாக பாதிக்கப்பட்ட 500 குடும்பங்களுக்காகவும், அக்குடும்பத்தவர்களில் தங்கி வாழும் 1232 பேரின் நன்மை கருதியும் நிர்மாணிக்கப்பட்ட நுரைச்சோலை வீடமைப்புத்திட்டத்தை பல அரசாங்கம் ஆட்சியில் இருந்து வந்த வேளை தம்மை ஏமாற்றி வந்ததாகவும், தற்போது மக்கள் நல சேவைகளை முன்னெடுத்து வரும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் இவ்வீட்டுத் திட்டத்தை தமக்கு வழங்கும் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

முன்னாள் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சராக இருந்த பேரியல் அஷ்ரஃபின் முயற்சியின் பயனாக சவூதி அரேபிய நாட்டின் நிதி உதவியில் சுனாமி பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட அக்கரைப்பற்று பிரதேச மக்களுக்காக அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட ஆலிம் நகர் கிராமத்திற்கு அண்மையில் அமையப் பெற்றுள்ள நுரைச்சோலைப் பிரதேசத்தில் சுமார் 60 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட நிலப்பரப்பில் அனைத்து வசதிகளையும் உள்ளடக்கியதான நவீன வீடமைப்புத் திட்டமொன்று உருவாக்கப்பட்டது.







கடந்த 2006 ஆம் ஆண்டு மே மாதம் இரண்டாம் திகதி இவ்வீடமைப்புத் திட்ட நிர்மாணத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதன்பிரகாரம் சுமார் 1000 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான நிதியினைக் கொண்டு நவீன முறையில் 500 வீடுகள் இப்பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டன. சில காரணங்களின் அடிப்படையில் இவ்வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு 20 ஆண்டுகளாகியும் இவ்வீடுகள் உரியர்களுக்கு வழங்கப்படாமலிருப்பது மிகுந்து வேதனையளிக்கின்றது என பாதிக்கப்பட்ட மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இக்கிராமத்தில் மகளிர் பாடசாலை, ஆண்கள் பாடசாலை, நவீன வைத்தியசாலை, பாரிய ஒன்றுகூடல் மண்டபம், சனசமூக நிலையம், பள்ளிவாசல், பஸ் தரிப்பு நிலையங்கள், விளையாட்டு மைதானம், நவீன சந்தைக் கட்டடங்கள் மற்றும் நவீன ஒய்வறைகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளை உள்ளடக்கியதாக இவ்வீடமைப்புத் திட்டம் உருவாக்கம் பெற்றுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

## வவுனியா வைத்தியர்கள்

# கழுத்தில் பாய்ந்த கூரிய தடியை வெற்றிகரமாக அகற்றி சாதனை



வவுனியாப் பொது வைத்தியசாலையில் கழுத்தில் கூரியதடி ஒன்று குற்றி உயிருக்குஆபத்தானநிலையில் சேர்க்கப்பட்ட முதியவருக்கு வைத்தியர்கள் மேற்கொண்ட சத்திரசிகிச்சையால் கூரியதடி அகற்றப்பட்டதுடன் அவர் உயிராபத்தின்றி காப்பாற்றப்பட்டார்.

குறித்த சத்திரசிகிச்சை செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில் -

கழுத்தில் கூரியதடி ஒன்று குற்றிமறுபக்கம்வந்தமுதியவர் ஒருவர் ஆபத்தான கட்டத்தில் வவுனியாவைத்தியசாலையில் செவ்வாய்க்கிழமை சேர்க்கப்பட்டிருந்தார்.

குறித்த முதியவருக்கு வைத்தியசாலையில் உரிய நேரத்தில் விரைவாக முன்னெடுக்கப்பட்ட சத்திரசிகிச்சை மூலம் அவரது கழுத்தில் குற்றிய தடி அகற்றப்பட்டதுடன் அவர் உயிராபத்தின்றி காப்பாற்றப்பட்டார்.

இந்த வெற்றிகரமான சத்திரசிகிச்சையை உணர்வழியியல் மருத்துவநிபுணர் நாகேஸ்வரன்தலைமையிலான மயக்கமருந்து அணியினருடன் இணைந்து சத்திரசிகிச்சை நிபுணர் ரஜீவ் நிர்மலசிங்கம் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# குஷ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது

கட்டுநாயக்க விமான நிலையத்தில் பொலிஸாரால் செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் குஷ் போதைப்பொருளுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் அதிகாரிகள் குழுவிற்கு கிடைத்ததகவலின் அடிப்படையில்விமானநிலைய சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவினரால் குறித்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து 04 கிலோகிராம் 388 கிராம் குஷ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 30 வயதுடைய பயகம பகுதியைச் சேர்ந்தவராவார்.

குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு மற்றும் கட்டுநாயக்க விமான நிலையப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பால்நிலைசார் வன்முறைக்கு எதிரான செயற்பாட்டுக் குழுக் கலந்துரையாடல்





பால்நிலைசார் வன்முறைக்கு எதிரான செயற்பாட்டுக்குழுக் கலந்துரையாடலானது யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் செவ்வாய்க்கிழமைமாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பால் நிலைசார் வன்முறைக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பாகஆராயப்பட்டது. குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள்தொடர்பாகவும் பேசப்பட்டது.

மேலும், பிரதேசசெயலகங்களுடன் அரச சார்பற்ற நிறுவனங்கள் இணைந்த வகையில் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்க அதிபரால் ஆராயப்பட்டு, எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான அறிவுறுத்தல்கள்வழங்கப்பட்டு, அதன் முன்னேற்றத்தினை அடுத்துவரும் காலாண்டு கூட்டத்தில்ஆராயநடவடிக்கை எடுக்குமாறும் அரசாங்க அதிபர் உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இக்கூட்டத்தில் மாகாண சிறுவர் நன்னடத்தை ஆணையாளர், பிரதேசசெயலாளர்கள், உதவி மாவட்ட செயலாளர், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட, பிரதேச பெண்கள் அபிவிருத்திஉத்தியோகத்தர்கள் கலந்துகொண்டார்கள்.

# மார்கழி என்றுமே மாண்புடை மாதமே!



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண் - ஆஸ்திரேலியா

தேவர்கள் விரும்பும் சிறப்புடை மாதம்
பூதலம் பூஜைகள் பொலிந்திடும் மாதம்
சீதளம் நிறையும் சிறப்புடை மாதம்
ஆலயம் அனைத்தும் அடியவர் நிறைவார்

அரனை வணங்குவார் ஐயப்பன் துதிப்பார்
தீப ஒளியில் ஆலயம் யாவுமே
தேவ லோகமாய் பொலிந்துமே நிற்கும்
மக்களின் மனத்தில் மார்கழி மாதம்

மங்கலம் அற்றது என்னும் எண்ணம்
இருப்பது என்பது பொருத்தம் அல்ல
மார்கழி என்றுமே மங்கல மாதமே
பீடை பிடித்தது மார்கழி அல்ல

பீடுடை மாதமே மார்கழி மாதம்
அறிவைத் தீட்டுவீர் அனைத்தும் தெளியும்
அறிவு தெளிந்தால் ஆன்மீகம் மலரும்
தோடுடை செவியனைப் பாடிய சம்பந்தர்

தோன்றிய மாதம் மார்கழி மாதம்
அசையாச் சிவனின் அழகுத் தேரை
அசையச் சேந்தனார் பாடிய மாதம்
உருகா மனத்தை உருகிடச் செய்யும்

திரு வாசகத்தில் திரு வெம்பாவையை
பாடிப் பரவி பரமனைப் போற்றி
பக்தியில் மூழ்கும் பாங்குடை மாதம்
ஆண்டாள் நாச்சியார் அருளிய பாவையை

அடியார் பாடி அகநிறை வடைவார்
வரங்களை வேண்டி மங்கையர் எல்லாம்
மனமெலாம் ஒன்றிப் பாடியே பரவுவார்
சைவம் வைணவம் சங்கமம் ஆகிடும்

சன்மார்க்க மாதம் மார்கழி ஆகும்
மங்கையர் யாவரும் வரன்களை வேண்டி
மார்கழி மாதத்தில் வேண்டுவார் இறையினை
பகவத் கீதையைப் பகர்ந்தவன் கண்ணன்

அவனே மொழிந்தான் மாதங்களிலே மார்கழியென்று
கீதைக் கண்ணன் போற்றிய மாதம்
மார்கழி என்பதை மனமெலாம் இருத்துவோம்
தத்துவம் இருக்கும் சமயமும் இருக்கும்

இத்தரை சிறக்கப் பக்தியும் இருக்கும்
முத்திரை மாதம் மார்கழி ஆகும்
சித்தம் இருத்துவோம் சிறந்திடும் வாழ்வு
ஐயம் என்பதை அகற்றிட வேண்டும்

அறிவை நிறைத்துத் தெளிந்திட வேண்டும்
மனத்தைச் செம்மை ஆக்கிட வைக்கும்
மார்கழி என்றுமே மாண்புடை மாதமே !

### அம்பாறை ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில்

# குடிதண்ணீர்ப் பிரச்சினை குறித்து தீர்மானம் எடுக்காதமை வேதனை

### அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை தெரிவிப்பு

(ஹமீட்)

அம்பாறை மாவட்டத்தில் சாய்ந்தமருது, மாளிகைக்காடு, காரைதீவு ,நிந்தவூர், அட்டப்பளம் போன்ற பிரதேசங்களில் வாழும்72ஆயிரம்மக்களுக்கான குடிநீர் தொடர்பான விடயங்களுக்கு தீர்வுகான வேண்டுமென சம்மாந்துறை பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் என்னால் முன்மொழியப்பட்டு நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு நேரம் போதாது என நாடாளுமன்ற உறுப்பினர் ஆதம்பாவா கூறியது சிறுபிள்ளைத்தனமான விடயமாகும்எனசம்மாந்துறை பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் உதுமாலெப்பை தெரிவித்தார்.

சம்மாந்துறை பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் எ .ஆதம்பாவா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கிராமிய அபிவிருத்தி சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்தபியதிஸ்ஸ,நாடாளுமன்ற உறுப்பினர்களான தாஹிர் , ஏ.எம்.மஞ்சுல ரத்னாயக்க, கே.கோடிஸ்வரன், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.நிசாம் காரியப்பர், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம் ஏ. நௌஷாட் மற்றும் திணைக்களத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் உதுமாலெப்பை தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் -

கடந்த வருடமும் இவ் வருடமும் எமது மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் சம்மாந்துறை கொள்ளாவெளி வடிச்சல் பிரதான வாய்க்கால் உடைந்ததால்

விவசாயிகளின் காணிகள் பாதிக்கப்பட்டதுடன், சாய்ந்தமருது, மாளிகைக்காடு ,காரைதீவு , அட்டப்பளம் பிரதேசங்களில் வாழும் 72 ஆயிரம் மக்கள் குடிநீரின்றி மிகவும்கஷ்டப்பட்டனர்.இந்த வாய்க்கால் தற்காலிகமாக திருத்தியமைக்க நீர் வழங்கல் வடிகாலமைப்புசபையின்உயர் அதிகாரிகளும் நீர்ப்பாசன திணைக்களத்தின் உயர் அதிகாரிகளும் இணைந்து செயற்பட்டனர்.




எனவே, சம்மாந்துறை கொள்ளாவெளி பிரதான வாய்க்கால்உடைக்கப்படாமல் நிரந்தரமானதீர்வு காணப்பட வேண்டும். அப்போதுதான் விவசாயிகளுக்கு ஏற்படும் தொடர்ச்சியான நஷ்டங்களையும் 72,000 மக்களின் குடிநீர் பிரச்சினைகளுக்கும் நிரந்தரமான தீர்வு கானலாம் எனத் தெரிவித்தார்.

இது தொடர்பாக சம்மாந்துறை நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர் கஜன்கருத்து தெரிவிக்கையில்-

நீர்வழங்கள்வடிகாலமைப்பு சபையின் பெரிய அளவிலான குழாய்கள் பிரதான வாய்க்கால்களில் பொருத்தப்பட்டிருப்பதால் வெள்ளம் ஏற்படும் போதும் பிரதான வாய்க்கால்கள் உடைந்து போகின்றது. எனவே நீர் வழங்கள் வடிகாலமைப்பு சபைக்குரிய பெரிய அளவிலான குழாய்கள் தனியாக பொருத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம கருத்து தெரிவிக்கையில் இது ஒரு முக்கியமான மக்களுடைய பிரச்சினையாக இருப்பதால் இது தொடர்பாக சம்மாந்துறை பிரதேச செயலாளர், சம்மாந்துறை பிரதேச நீர்ப்பாசன பொறியிலாளர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் அடையாளப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு நீர் வழங்கள் வடிகாலமைப்பு சபையின்பிரதானகுழாய்களை பொருத்துவதற்காகன ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேரத்ன தலைமையில் விஷேட குழு நியமிக்கப்பட்டது.இக்குழுவில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.ஹனிபா, நீர்ப்பாசனபொறியலாளர் கஜன், நீர் வழங்கள் வடிகாலமைப்பு சபையின் பிராந்திய முகாமையாளர் ஹைதர் அலி ஆகியோர் இடம் பெறுகின்றனர்.



# மாணவர்களின் கலை நிகழ்வும் பரிசளிப்பும்

(றிபாஸ்)

கல்முனை நற்பிட்டிமுனை அல் அக்ஸாபாலர் பாடசாலையின் 19 ஆவது ஆண்டு நிறைவு விழா பாடசாலையில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

'கலை நிகழ்வும், பரிசளிப்பு விழாவும்'எனும் தொனிப்பொருளில் பாடசாலையின் அதிபர் இஸ்மாயீல் றியாஸா தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வுக்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்பின் கிழக்கு மாகாண சட்டப்பணிப்பாளர் சீ.எம்.கலீம் பிரதம அதிதியாகவும், அதிபர் எம்.எல். பதீயூத்தீன் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

பாடசாலையின் மாணவ, மாணவிகளால்பல்வேறுபட்ட கலைநிகழ்வுகளும், போட்டிநிகச்சிகளும்இடம்பெற்றதுடன் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு அதிதிகளால் சான்றிதழ் மற்றும் பரிசுப் பொருள்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.







## மூளை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்க தயாராகவுள்ளது. நோய்த் தடுப்புக்குமுன்னுரிமைஅளிப்பதுதற்போதைய அரசாங்கத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

உலகமக்கள் தொகையில் அண்ணளவாக 4 பில்லியன் அதாவது 3.4 பில்லியன் பேர் தற்போது மூளை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இந்நாட்டில் இதுவரை மூளை நோயால் பாதிப்புக்குள்ளாகிய சுமார் 400 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.பாரிசவாதம், டிமென்ஷியா, ஒற்றைத் தலைவலி என்பன கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய மிக முக்கியமான மூளை நோய்களாக உள்ளன.

நீரிழிவுநோயினால்ஏற்படும்நரம்புபாதிப்பு, மனித வாழ்வை அதிகம் பாதிக்கும் நோயாக கண்டறியப்பட்டுள்ளது. மூளைநோய்கள் குறித்துமுறையானவிழிப்புணர்வுஅளிப்பதன் மூலம், 90 சதவீதத்துக்கும் அதிகமான நோய் நிலைமைகளில் இருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும் என்றார்.

# ஹங்குராங்கெத்த கபரகல தோட்டத்தில் தீயால் பாதிப்புற்றோருக்குக் காணிகள்

## இராதாகிருஷ்ணன் எம்.பி நடவடிக்கை

(கிஷாந்தன்)

அண்மையில் கபரகல தோட்டத்தில் தீயால்பாதிக்கப்பட்ட 20 குடும்பங்கள் தொடர்பாக நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணனின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இது தொடர்பாக அவரின் பணிப்புரையின் பேரில் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஆர்.இராஜாராம்கபரகலதோட்டத்திற்கு விஜயம் செய்து அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடி அவர்களுடைய பாதிப்புகள்தொடர்பானவிடயங்களை ஆராய்ந்ததுடன் உடனடியாக சுமார் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான நிவாரண பொருள்களைபெற்றுக்கொடுத்ததுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு தனி வீடுகளை அமைப்பதற்கான காணிகளை பெற்றுக் கொடுப்பது தொடர்பாக தோட்ட நிர்வாகத்துடன் கலந்துரையாடியுள்ளார்.

தோட்ட நிர்வாகம் இவர்களுக்கு காணிகளை வழங்க வேண்டும் என இந்த பேச்சில் தெரிவிக்கப்பட்டதோடு, அதனை நிர்வாகம் ஏற்றுக்கொண்டுள்ளதுடன் மிகவிரைவில்அவர்களுக்குகாணிகளை வழங்குவதற்கு தோட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுப்பதாக தோட்ட முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாகஇராதாகிருஷ்ணன் எம்.பி. விடுத்துள்ள விசேட ஊடக அறிக்கையின் மூலம் மேலும் தெரிவித்துள்ளதாவது -

அண்மையில் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் காணிகளை வழங்குவது தொடர்பாக பேச்சு முன்னெடுக்கப்பட்டு அவர்களுக்கும் காணிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையிலேயே, குறித்த தோட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு காணிகளை பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டு அது தற்பொழுதுஏற்றுக்கொள்ளப்பட்டுமிக விரைவில் அவர்களுக்கான காணிகள் பெற்றுக்கொடுக்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.





அரசாங்கம் நல்லாட்சி காலத்தில் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் வீடுகள் கட்டப்பட்டதை போல புதிய அரசாங்கமும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வர வேண்டும் எனவும், இந்த நடவடிக்கையை விரைவுப்படுத்த வேண்டும் எனவும் அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# உயிரிழந்த நிலையில் காட்டு யானை மீட்பு

மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளி வனஜீவராசிகள் சுற்றுவட்டாரக் காரியாலயப் பிரிவிற்குட்பட்ட பகுதியில் திக்கோடையில் உயிரிழந்த நிலையில் யானை ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக வெல்லாவெளி வனஜீவராசிகள் சுற்றுவட்டாரக்காரியாலய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த யானை நேற்று (புதன்கிழமை) யானை மீட்க்கப்பட்டுள்ளதுடன் அப்பகுதியில் உள்ள வாய்க்கால் ஒன்றினுள் சுமார் 20-25 வயது மதிக்கதக்க ஆண் யானை ஒன்றே சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

மிக நீண்ட காலமாகவிருந்து வெல்லாவெளி பிரதேச செயலக பிரிவில் காட்டுயானைகளின் அட்டாகாசங்களும், தொல்லைகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்ற இந்நிலையில் உயிரிழந்த நிலயில் இந்த காட்டு யானையின் உடல் மீட்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அப்பகுதியில் இதுவரையில் காட்டு யானைப் பாதுகாப்பு வேலிகள் இன்மையால் யானை மனித மோதல்கள் தொடர்ந்த வண்ணமுள்ளன.

எனினும் இவ்வாறு உயிரிழந்த காட்டு யானையின் உடலை வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் பார்வையிட்டுள்ளதோடு யானையின் மரணம் தொடர்பிலும் விசாணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# பண்டிகைக்கு மேலதிக ரயில்களை இயக்க முடியாத நிலைமையாம்

## ரயில்வே திணைக்களம் கவலை

ரயில் ஓட்டுநர்கள் மற்றும் காவலர்கள் பற்றாக்குறையால் பண்டிகைக் காலத்துக்குத் தேவையான கூடுதல் ரயில்களை இயக்க முடியாத நிலைமை காணப்படுவதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் தமிழ், சிங்களப் புத்தாண்டுக்கு முன்னதாக இந்தப் பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து ரயில்வே திணைக் களத்தின் ஊடகப் பேச்சாளரும், போக்குவரத்துப் பிரிவின் பிரதிப் பொது முகாமையாளருமான எம்.ஜே.இந்திபோலேஜ் ஊடகங்களுக்கு தெரிவித் துள்ளதாவது -

பண்டிகைக் காலத்தில் கடந்த ஆண்டுகளில் 20 இக்கும் மேற்பட்ட ரயில்கள் இயக்கப்படும் நிலைமை இருந்தாலும் தற்போது அந்த நிலைமையுடன் ஒப்பிடும்போது, இந்த ஆண்டு கிறிஸ்மஸ் பண்டிகைக்கு இரண்டு கூடுதல் ரயில்களை மட்டுமே இயக்கக்கூடிய நிலைமையே உள்ளது.

ரயில் ஓட்டுநர்கள் மற்றும் காவலர்கள் உள்ளிட்ட ஊழியர்கள் பற்றாக்குறை இருப்பதால் இந்த ஆண்டு போதுமான ரயில்களை இயக்க முடியாது போயுள்ளது.

கொழும்பு கோட்டையிலி ருந்து பதுளைக்கு இரு வழியில் இரண்டு சிறப்பு ரயில்கள் மட்டுமே கூடுதலாக இயக்கப்படுகின்றன. சாதாரண ரயில்களையும் சிரமங்களுடன் தான் இயக்குகிறோம்.

ரயில்வே திணைக்களத்துக்குள் நிலவும் பணியாளர் பற்றாக்குறை தான் இதற்கு பிரதான காரணமாக இருக்கிறது. 2017 முதல் ரயில் ஓட்டுநர்கள் மற்றும் காவலர்களுக்கான ஆட்சேர்ப்புகள் எதுவும் இல்லை. இந்தக் காலகட்டத்தில், பலர் ஓய்வு பெற்றுள்ளனர். இந்த நிலைமை தொடர்ந்தால், வழக்கமான ரயில் செயற்பாடுகளும் பாதிக்கப்படும். இருப்பினும், தற்போதைய அரசாங்கம் நிலைமையைப் புரிந்துகொண்டுள்ளது.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவர்கள் சில நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டுகாலத்திற்கு முன்பு ஏதேனும் தீர்வு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. - என்றார்.

## போக்குவரத்துக் கண்காணிப்பு தனிப் படையிடம் சிக்கிய பலர்

நத்தார் பண்டிகையை முன்னிட்டு வீதி விபத்துக்களை தடுக்கும் நோக்கில் பொலிஸாரால் விசேட போக்குவ ரத்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது, நாட்டில் கடந்த 24 மணித்தியாத்திற்குள் மது அருந்திவிட்டு வாகனம் செலுத்திய சாரதிகள் 251 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, 8,747 பேர் போக்குவரத்து விதிகளை மீறியுள்ளனர் எனவும் இனிவரும் காலங்களில் இவ்வாறு விதிமீறல்களுக்கு உட்படும் வேளையில் சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இதுவரையில் நாட்டில் வாகன விபத்துக்கள் எதுவும் பதிவாகவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

## கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்ட போலந்து நபர் சுழியோடிகளால் மீட்பு

அஹுங்கல்ல கடற்கரையில் நீராடிக் கொண்டிருந்த 64 வயதுடைய போலாந்து பிரஜை ஒருவர் கடல் அலைகளால் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் சுழியோடிப் படைப் பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளார்.

அஹுங்கல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அஹுங்கல்ல கடற்கரையில் செவ்வாய்க்கிழமை நீராடிக் கொண்டிருந்த வெளிநாட்டு பயணி ஒருவர் எதிர்பாராத விதமாக கடல் அலைகளால் அடித்துச் செல்லப்பட்டு நீரில் மூழ்கியுள்ளார்.

இதன்போது விரைந்து செயற்பட்ட உயிர் பாதுகாப்பு சுழியோடிப் பிரிவினர் கடலில் மூழ்கிய நபரை மீட்டு உடனடியாக முதலுதவி அளித்துள்ளனர்.

குறித்த நபர் சுற்றுலாவுக்காக இலங்கைக்கு வந்திருந்ததாக பொலிஸார் விசாரணையில் தெரியவந்துள்ளதோடு மேலதிக சிகிச்சைகளுக்காக அவர் அருகில் இருந்த வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.12.2024இல் வெளியிடப்பெற்றது